Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி - 04 | 21 - 08 - 2003 | வியாழக்கிழமை | ஓசை 184



R.A.Nelsan Yasarathne
T.P: 024 -23318
NELSON LEARNERS
(Government Approved "A" Grade Driving School)
Reg No :D.S.242
சிறிய வாகனம் முதல் பெரிய வாகனம் வரை பயிற்சிகொடுத்து லைசன்ஸ் கொடுக்கப்படும்.
கிளை: வவுனியா, யாழ்ப்பாணம். (8246)
No:86, Bus Stand Complex Vavuniya.

## மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்ய சதித்திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளதாகப் பொலிசார் உறுதிப்படுத்தியுள்ளதையடுத்து நேற்றிலிருந்து அவருக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தங்கொல்ல சிறையிலுள்ள பாதாள உலகக் குழுவினர் இத்திட்டத்தைத் தீட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இடைக்கால நிர்வாகம் குறித்த பாரிஸ்மாநாடு இன்று ஆரம்பம்

அரசின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளை ஆராயும் விடுதலைப்புலிகளின் சட்ட வல்லுனர் குழுவினரின் மாநாடு இன்று பிரான்ஸ் தலைநகர் பாரிசில் ஆரம்பமாகவுள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் போது அரசாங்கத்தின் யோசனைகள் தீவிரமாக ஆராயப்படவுள்ளன.

இலங்கையிலிருந்து பத்துப்பேரும் மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா ஐரோப்பிய நாடுகளில் இருந்து பத்துப் பேரும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். இதேவேளை நோர்வே நாட்டின் சிறிலங்கா தூதரகத்தின் இரண்டாவது தூதரக அதிகாரி தோமஸ் பிறாங்லன் நேற்று மாலை கொழும்பில் இருந்து பாரிஸ் நோக்கிப் புறப்பட்டுள்ளார்.

## அவுஸ். பிரதித் தூதுவர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவுக்கான அவுஸ்திரேலிய பிரதித் தூதுவர் நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டுள்ளார். யாழ். அரச செயலகத்திற்குச் சென்று மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் மற்றும் திட்டப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை

(08 ஆம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம் பிரதேசங்களின் பாதுகாப்புக்கெனக் கூறி

# தமிழ்பகுதிகளில் புதிய முகாம்களை அமைக்க சிறில. விசேட அதிரடிப்படையினர் முயற்சி

## தமிழர் தரப்பில் கடும் எதிர்ப்பு

(மட்டக்களப்பு)

**கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களின் பாதுகாப்புக்கெனக் கூறி தமிழ்ப் பிரதேசங்களில் படைமுகாம்கள் புதிதாக அமைக்கப்படுவதற்கு விசேட அதிரடிப்படையினரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு தமிழர் தரப்பில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று துறைநீலாவணைக் கிராமத்தில் விசேட அதிரடிப்படை முகாமை மீண்டும் அமைப்பது தொடர்பாக விசேட அதிரடிப்படை பிரதிக் கட்டளையதிகாரி என். எஸ்.ஜி.லூக்கே உட்பட உயர் அதிகாரிகள் குழுவொன்று அந்த இடத்துக்கு நேரடியாகச் சென்று பொருத்தமான இடங்கள் சிலவற்றைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளது.

இந்த நடவடிக்கையை நிறுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் விசேட அதிரடிப்படை பிரதிக் கட்டளை அதிகாரியுடன் தொடர்புகொண்டு வலியுறுத்திக் கேட்டுள்ளார். இதேவேளை கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று பொலிஸ் பிரதேசங்களின் பாதுகாப்பை கூட்டாக நடத்தும் முகமாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மூவர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதிக்கடன் 1500பேருக்கு மீளளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்தின் கீழ் கடன் செலுத்திய 1500 பேர் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் நாள் வரை கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளதாக நிதித்துறை அறிவித்துள்ளது. மேற்படி தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களும் நடைமுறைகளும் நாளைய ஈழநாதம் நாளேட்டில் வெளியிடப்படும். (பா)

## கிழக்கில் முஸ்லிம் இளைஞர்கள் 500 பேரை பொலிஸ் சேவைக்கு இணைக்க நடவடிக்கை

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை அதிகரிக்கவென பொலிஸ் திணைக்களத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை ஓரிரு நாட்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் ஆனந்த ராஜா கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் தகுதி வாய்ந்த முஸ்லிம் இளைஞர்களிலிருந்து பொலிஸ் சேவைக்கு ஐநூறு பேர் திரட்டப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் நேர்முகப் பரீட்சைகள் கல்முனை, மட்டக்களப்பு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அம்பாறை போன்ற இடங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் இடம்பெறவுள்ளது என்றும் கூறியுள்ள பொலிஸ்மா அதிபர் கிழக்கு மாகாணத்திற்கு மேலதிகமாக 50 பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என்றார்.

### - பருத்தித்துறைப் பகுதியில் -

## கடற்புலிப் போராளி ஒருவரை கைது செய்ய பொலிசார் முயற்சி

(வடமராட்சி)

விடுதலைப்புலிகளின் கடற்புலிப் போராளி ஒருவரை பலாத்காரமாக கைது செய்ய பருத்தித்துறை பொலிசார் முயன்றுள்ளனர். நேற்று தெல்லியடி வதிரிப்பகுதியில் உள்ள கடற்புலிகளின் போராளி ஒருவரின் வீட்டுக்குச் சென்ற பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் சிலர் அவரை கைகளில் பிடித்து பலாத்காரமாக தமது பிக்-அப் வாகனத்தில் ஏற்றிச் செல்ல முற்பட்டுள்ளனர். ஆயினும் யாழ். மாவட்ட அரசியல்துறை நடுவப் பணியகத்தின் அனுமதியின்றி பொலிஸ் நிலையத்துக்குச் செல்ல மறுத்த அப்போராளி பலாத்காரத்தைப் பிரயோகித்தால் தான் சயனைட் அருந்தி தற்கொலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசிற்கு வழங்கும் ஆதரவை மு.கா. மீள் பரிசீலனை செய்யும்

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறினால் ஆளும் கட்சிக்கு வழங்கும் ஆதரவை மீள் பரிசீலனை செய்யப்போவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். கொழும்பு வானொலியொன்றுக்கு பேட்டியளிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்தார். 24 மணி நேரத்திற்குள் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளைச் செயற்படுத்த வேண்டுமென அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'நிக்கோட்' வாகனம் திருமலையில் கடத்தல்

'நிக்கோட்' நிறுவனத்துக்குச் சொந்தமான பிக்அப் வாகனம் ஒன்று திருமலையில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளது. திருமலை நகரப் பகுதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு அருகாமையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போதே மேற்படி வாகனம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் கடத்தப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் சாரதி முறைப்பாடுசெய்துள்ளார். (25)

## பயிர்ச்செய்கை நிலத்தில் படையினர் முகாம்

(யாழ்ப்பாணம்)

கைதடிநுணாவிலில் பயிர்ச்செய்கைப் பிரதேசத்தில் கடந்த 13ஆம் திகதி முதல் சிறிலங்காப் படையினர் முகாம் அமைத்து தங்கியுள்ளனர். 25இற்கும் மேற்பட்ட படையினர் தொடர்ந்து தங்கியிருப்பதால் பொது மக்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாதுள்ளதோடு துன்பமடைந்துள்ளனர். இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மனித உரிமைகள் ஆணைக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கொலைச் சந்தேக நபரை நீதிமன்றம் ஏற்றிச்சென்ற வாகனம் மீது தாக்கு

### சந்தேக நபரும், பொலிசாரும் பலி

(அலுவலக செய்தியாளர்)

தென்மாகாண அமைச்சர் ரஞ்சித்தைக் கொலை செய்தாரென கருதப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்திற்கு ஏற்றிச் சென்ற வாகனம் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியதில் சந்தேக நபர் உட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று மதியம் தங்காலை சிறைச்சாலையிலிருந்து எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்திற்கு தென் மாகாண அமைச்சர் ரஞ்சித் கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபர் கனில்ரத்தினவீர உள்ளிட்டோரை பொலிஸ் பாதுகாப்புடன் ஏற்றிச் சென்றுகொண்டிருந்த போது இடையில் வழிமறித்த ஆறு பேர் கொண்ட குழுவினர் கைதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கிய பொலிசார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன் போது பொலிசார் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வரலாற்றுக் கண்காட்சி வரும் திங்கள்வரை தொடரும்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழத்தின் கடைசி மன்னனான பண்டாரவன்னியன் ஆங்கிலேயரின் முல்லைத்தீவு படைமுகாமை வெற்றிகொண்டு 200ஆவது ஆண்டு நினைவு கூரும் வகையில் தமிழீழப் போராட்ட வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்காட்சி நிகழ்வு நேற்றுக்காலை 9 மணியளவில் கிளி. கிளிநொச்சி ம.வி.யில் ஆரம்பமானது. நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை மாணவர் அமைப்பைச் சேர்ந்த ரஜனி வைந்தன்அவர்களும், பொதுச்சுடரினை இராஜரட்ணம், கிளிநொச்சி ம.வி. அதிபர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மாவீரன் பண்டாரவன்னியன் அவர்

(08 ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### விற்பனைக்குண்டு

2004 தேசிய கல்வியியற் கல்லூரிக் கான விண்ணப்பமும் அஞ்சல், உப அஞ்சல் அதிகாரிகளுக்கான சிற்றூழியர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்ப படிவமும் கந்தபுரத்தில் உள்ள வாணி(பிக்பென்ஸ்) புத்தக சாலையில் பெற்றுக்கொள்ளலாம். (சி.8467)

### தவறிவிட்டது

கனகசிங்கம் விஜயபவான் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (713634271V) தமிழீழ வைப்பகப் புத்தகம், அடகுச்சிட்டை என்பன புதுக்காடு சந்திக்கும் இயக்கச் சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (3652)


# எண்ணெய்க் குதங்களுக்கு இந்தியாவிலிருந்து எரிபொருள்

லங்கா இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் சீனன்குடாவிலுள்ள பாரிய எண்ணெய்க் குதங்களை இந்த வருட முற்பகுதியில் பொறுப் பேற்றதை அடுத்து முதற் தடவையாக இந்தியாவிலிருந்து டீசல் மற்றும் மண் எண்ணெய்க் கப்பல் மூலம் திருமலைத் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலிலிருந்து எண்ணெய்க் குதங்களுக்கு எரிபொருள் நிரப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக லங்கா இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் சீனன்குடா எண்ணெய்குதங்களைப் பொறுப்பேற்ற போதும் இங்குள்ள 102 பாரிய எண்ணெய்த்தாங்கிகளிலும் ஆறு எண்ணெய் தாங்கிகளையே பயன்படுத்தி வருகின்றது. ஏனைய தாங்கிகளைப் புனரமைக்க நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருட முற்பகுதியில் தாங்கிகள் பொறுப்பேற்கப்பட்ட நிலையில் சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே கையிருப்பில் வைத்திருந்த எரிபொருட்களே இதுவரை விநியோகம் செய்யப்பட்டு வந்துள்ளன.

## கருத்துரை நிகழ்வு

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு நகர் வலயத்தின் வேணாவில் கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை 7.00 மணிக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்துரை நிகழ்வும், திரைப்படக் காட்சியும் புதுக்குடியிருப்பு நகர் வலய அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

இங்கு திரைப்படக்காட்சி புதுக்குடியிருப்பு நகர் வலயப் பொறுப்பாளரின் கருத்துரை என்பன இடம் பெற்றன. (19)

## மீன்பிடி உபகரணம் வழங்கல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திகிலி வெட்டையைச் சேர்ந்த பத்து மீனவர்களுக்கு இலகுகடன் அடிப்படையில் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்கவுள்ளது.

திகிலி வெட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவத்தில் மீன்பிடிப் படகுகளும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

## கான்ஸ்டபிள் கைது

மன்னாரில் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

போதைப் பொருள் வியாபாரிகளுடன் தொடர்பு வைத்திருந்தமை, போதைப் பொருள் கடத்தலுக்கு உதவியமை மற்றும் இரண்டு கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டமை தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டதாக மன்னார் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட நீதவான் முன்னிலையில் திங்கட்கிழமை ஆஜர் செய்யப்பட்ட இவரை, இரு வாரங்களிற்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் சேனாநாயக்க என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.


## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் * 17 * 11 * 1973



மறைவு * 17 * 08 * 2002

## ஜெயசீலன் ஜெயரூபன்

B.Com (Hons)

*3ஆம் கண்டம், கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.*

**திதி-தசமி 22-08-2003**

பாலூட்டிச் சீராட்டிய அன்னையை விடவும்
பாராட்டிப் பட்டம் தந்த தந்தையை விடவும்
பக்க பலமாய் நின்ற நண்பர்களை விடவும்
பலகோடி மதிப்புடைய எங்கள் உடன்பிறப்பே !
நீங்கள் செய்து முடித்த தான தர்மங்களும்
புண்ணியங்களும் லட்சோப லட்சம்.
இருந்தபோதிலும் மரணத் தறுவாயிலிருந்து
அவை உங்களைக் காக்க வில்லையே !
கர்ணனைப் போல் அப்புண்ணியங்களையும்
தானம் செய்து விட்டீர்களோ?

உங்களைப்பிரிந்து ஓராண்டு
கழிந்த போதும் உங்கள் நினைவுகளிலேயே
வாழ்ந்துகொண்டிருக்கும்
உங்கள் உடன்பிறப்புக்கள்.

**ஜெயரூபனின் ஓராண்டு நினைவு நிகழ்வு 22-08-2003 நாளை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

உங்கள் பிரிவால் துயருறும்

**அப்பா,அம்மா,பெரியம்மா,
பெரியப்பா, அன்ரிமார், சித்தப்பா,
தம்பிமார், தங்கைமார்.** (3483)

## 14ஆம் ஆண்டு நினைவு நாள்...

ஜனனம் 14 06 1962



வீரமரணம் 21 08 1989

## மேஜர் (டயஸ்)கந்தசாமி

(முன்னாள் அம்பாறை,யாழ்.மாவட்ட அரசியற் பொறுப்பாளர்)

*மயில்வாகனம் தவராசா–எச்சமோட்டை*

விடுதலைச் சூரியன்! விடுதலைக் காற்று!
விதேசிய படைகளை விரட்டிய வீரன்!
படுகளம் மீதிலே பாய்ந்ததோர் வேங்கை!
டயஸ்
எங்கள் அன்னை பூமியை
அன்னியர் அபகரித்தபோது
நீ எழுந்தாய்.
எட்டுத் திக்கும் அதிர நடந்தாய்
வேங்கையாய் எங்கள் வீதியில் திரிந்தாய்
எதிரியை எரிக்கும் போரிலே
நீ விழுந்தாய்.
காலக்காற்று உனது சுவடுகளை அழிக்காது
நாட்கள் கழியும் உனது கனவுகள் கலையாது
உன் கனவுடன் நாங்கள் எழுந்துள்ளோம்
உன் நினைவுடன் உனது பாதையில் நாங்கள்!

(சி.8469)

தகவல்:
செ.தனபாலன்
கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகம்

மனைவி,
மகள்
வலயக் கல்வி அலுவலகம் அருகாமையொழுங்கை
ஆனந்தபுரம்-கிளிநொச்சி

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24 -05- 1945

மறைவு 27 -08 -1997

அமரர்

## த.வித்தியானந்தராசா

(யோகா பத்தர்.முல்லைத்தீவு)

யோகா நகை மாளிகை உரிமையாளர்

இந்நாளில் இவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

(3484)

03ம் வட்டாரம் முள்ளியவளை

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்.


6ஆம் பக்கத் தொடர்ச்சி...

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் **(NECORD)**, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை ( தொலைபேசி இல : 026 - 2227434, தொலைநகரி 026-2227401, மின்னஞ்சல் : **necord@sltnet.lk)** என்ற விலாசத்திலுள்ள திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

6. கேள்வி ஆவணங்களை 20-08-2003 இலிருந்து 01-09-2003 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூ 1000 /= த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

7. கேள்விகோருவோர் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு முத்திரையிடப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் தலைவர், திட்ட கேள்விச் சபை, **NECORD,** 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலைக்கு 04-09-2003 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

9. முன்கூட்டியே கேள்விகோருவோர் கூட்டமொன்று 29-08-2003 அன்று மாலை 2.00 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் நடைபெறும்.

10. கேள்விகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

த.லங்காநேசன்
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு
அபிவிருத்தித் திட்ட கேள்விச் சபைத் தலைவர்,
140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை.

(சி-8258)

# ஜெருசலேமில் தற்கொலைத் தாக்குதல் 20 இஸ்ரேலியர்கள் உடல் சிதறிப் பலி!

## - சமாதான முயற்சிகள் பின்னடையலாம்

**ஜெருசலேமில் புனித தேவாலயத்தில் வழிபாட்டினை மேற்கொண்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த இஸ்ரேலியர்கள் பயணம் செய்த பேருந்து மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலினால் 20பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

கமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் அமைப்புகளால் உரிமை கோரப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற இத்தாக்குதலில் மேலும் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்குமிடையே அமெரிக்க ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் அண்மைக்காலமாக தடைப்பட்டுள்ள நிலையில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை சமாதான முயற்சிகளை மேலும் பாதிக்கலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமாதான முயற்சிகள் தடைப்பட்டிருந்த நிலையில் இஸ்ரேல் வசமுள்ள மேற்குக் கரை நகரங்கள் நான்கை பலஸ்தீனர்களிடம் கையளிப்பது தொடர்பான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கலாமென நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த புதிய தாக்குதல், நிலைமை இன்னும் மோசமாகலாம் என அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலில் நடைபெற்ற மிக மோசமான தாக்குதல் இதுவென இஸ்ரேலிய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### ஜோர்தானுக்கு மாற்றம்!

ஈராக்கில் ஐ.நா.அலுவலகம் முன்பு குண்டு வெடித்து 20 பேர் பலியானதையடுத்து, பாக்தாத்திலுள்ள ஐ.நா அலுவலகத்தை அயல்நாடான ஜோர்தான் நாட்டிற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து இதன் ஊழியர்கள் ஜோர்தானுக்கு அனுப்பப்படவுள்ளார்கள்.

# ஐ. நா. சபை வரலாற்றில் மிகப்பெரிய தாக்குதல்!

## - போல் பிறேமர் கருத்து

(பாக்தாத்)

58 ஆண்டு கால ஐக்கிய நாடுகள் அமையத்தின் வரலாற்றில் அதன் அலுவலகம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதலாக ஈராக்கில் ஐ.நா. அதிகாரிகள் தங்கும் விடுதி மீது மேற்கொண்ட தாக்குதல் கணிக்கப்படுவதாக ஈராக்கின் அமெரிக்க ஆதரவு நிர்வாகத்திற்கு பொறுப்பான போல் பிறேமர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்: இத்தாக்குதலுக்கு இதுவரையும் எந்தவொரு அமைப்பும் உரிமை கோராத போதிலும், ஈராக்கில் தற்போது ஊடுருவியிருக்கும் அல் ஹைதா அமைப்பினரே இந்த தாக்குதலை மேற்கொண்டிருக்கலாமௌன தான் கருதுவதாக கூறியுள்ளார்.

இதேவேளை, மேற்படி தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இருபதாக அதிகரித்துள்ளது.



முன்னாள் ஈராக்கிய சனாதிபதியால் 1999இல் கொல்லப்பட்ட ஷியா முஸ்லிம் தலைவர் அலி அல் காபியின் நினைவுநாள் நிகழ்வின் போது திரண்டுள்ள ஷியா முஸ்லிம் ஆதரவாளர்கள்.

# எதிரணியின் நம்பிக்கையில்லாப் பிரேரணை 126 வாக்குகளால் தோல்வியடைந்தது!

(புதுடில்லி)

மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத்தீர்மானம் தோல்வியடைந்துள்ளது. சோனியா காந்தியின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையென பிரதமர் வாஜ்பாய் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசுக்கு ஆதரவாக 312 வாக்குகளும் எதிராக 186 வாக்குகளும் பதிவாகின.

இதற்கு முன்னர் பதிலளித்துப் பேசிய பிரதமர் வாஜ்பாய், ஆளும் கட்சியை சோனியா காந்தி கடுமையான வார்த்தைகளால் விமர்சித்ததையிட்டு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கார்கில் போரின் போது ஆயுதங்கள் வாங்கியதில் ஊழல் நடந்ததாக குற்றம் சாட்டி, மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை கொண்டுவந்தன.

இந்தத்தீர்மானம் மீதான விவாதத்தில் பேசிய சோனியா காந்தி வாஜ்பாய் அரசு உணர்ச்சியற்ற, ஊழல் நிறைந்த, கண்டிக்கத்தக்க அரசு என்று குற்றம் சாட்டியுள்ளார்.

அது மட்டுமன்றி ஆளும் கட்சிக்கு எதிராக 09 முக்கிய குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தார்.

இவரைத்தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சியினர் வாஜ்பாய் அரசு எல்லாவற்றிலும் தோல்வியடைந்து விட்டதாக குற்றம் சாட்டினர்.

22 மணி நேரம் நடந்த விவாதத்தின் பின்னர், அவற்றிற்குப்பதிலளித்துப் பேசிய வாஜ்பாய், எதிர்கட்சிகளின் குற்றச் சாட்டுக்களை திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொறுப்புள்ள ஒரு எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது, ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை பிறநாடுகளிடம் அடகு வைக்கும் அளவிற்கு நம் நாடு தரம் குறைந்து விடவில்லையென்றும் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த இந்த நம்பிக்கையில்லாத்தீர்மானம் தேவையற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால் பிரதமரின் பதிலுரை திருப்தி அளிப்பதாக இல்லை என்று சோனியாகாந்தி கூறியுள்ளார்.

எனவே இப்பிரச்சினையை மக்களிடம் எடுத்துச்செல்லப் போவதாகவும் கூறினார்.

இதையடுத்து வாக்கெடுப்பு நடைபெற்றது மொத்தம் பதிவான 498 வாக்குகளில் தீர்மானத்திற்கு எதிராக 312 வாக்குகளும் ஆதரவாக 186 வாக்குகளும் பதிவாகின.

இதையடுத்து எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத்தீர்மானம் தோல்வியடைந்ததாக சபாநாயகர் மனோகர் யோஷி அறிவித்தார்.

# ஈராக்கின் முன்னாள் துணை சனாதிபதி அமெரிக்க-பிரிட்டிஷ் படைகளால் கைது!


ஈராக்கின் முன்னாள் துணைச் சனாதிபதியும், சதாம் ஹுசைனின் முக்கிய கூட்டாளியுமான ரமதான் அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டுப் படைகளினால் பிடிபட்டுள்ளார்.

ஈராக்கில் அமைதி முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க-பிரிட்டிஷ் இராணுவத்தினர், ஈராக் முன்னாள் சனாதிபதி உட்பட மற்றும் அவருடன் நெருங்கிய தொடர்புடையவர்களை தேடி வருகின்றார்கள்.

இந்நிலையில்தான் 1991ஆம் ஆண்டு வளைகுடாப் போரின் போது சதாம் ஹுசைனின் முக்கிய ஆலோசகராகச் செயற்பட்ட தாஹா ஜாசித் ரமதான் ஈராக் நாட்டின் வடபகுதியில் தங்கியிருப்பதாக இராணுவத்திற்குத் தகவல் கிடைத்ததாகவும்.

இதையடுத்து இராணுவத்தினர் ரமதானைச் சுற்றி வளைத்துக் கைது செய்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

60 வயதான ரமதான் பிடிபட்டுள்ளதையடுத்து சதாம் ஹுசைன் தேடுதல் வேட்டையில் முக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.



இந்தோனேசிய படையினருக்கும் ஆஷே தீவிரவாதிகளுக்கு மிடையே அண்மையில் நடந்த துப்பாக்கிச் சமருக்குப்பின் விடுவிடாகச் சோதனை நடத்தும் அரச படைகளை உற்றுநோக்கும் ஆஷே பெண்ணும் பிள்ளைகளும்.

## காங்கிரஸ் கட்சி மறுப்பு

(சென்னை)

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்த தி.மு. கட்சிக்கு காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், தி.மு. கட்சியின் போராட்டங்களில் பங்கேற்கப் போவதில்லையென்றும் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க தி.மு. கட்சி மறுத்துவிட்டதால், அக்கட்சி நாளை 22ஆம் திகதி நடத்தவுள்ள போராட்டத்தை காங்கிரஸ் புறக்கணிக்குமௌன அதன் தமிழ்நாடு தலைவர் சோ.பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜி.கே. மூப்பனார் பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் இதனைக் கூறியுள்ளார்.



சர்வதேச பொருளாதாரம், பயங்கரவாதம் என்பவை தொடர்பாக, வார்சோவில் பேச்சு நடத்த வருகை தரும் ஜப்பானியப் பிரதமர் ஜுனிச்சிரோ கொய்சுமி விமானத்திலிருந்து இறங்குகிறார்.

# பாகிஸ்தானுடன் உடனடி பேச்சுக்களுக்கான திட்டம் எதுவும் தற்போதைக்கு இல்லை!

## - இந்தியா திட்டவட்டமாக அறிவிப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் உள்ளிட்ட இருதரப்புப் பிரச்சினைகள் குறித்து பாகிஸ்தானுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் எதுவுமில்லையென இந்தியா அறிவித்துள்ளது.

எனினும் சார்க் மாநாட்டில் பங்கேற்க எதிர்வரும் சனவரி மாதம் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தான் செல்வார் என்று வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு அந்நாட்டுடன் தூதரக உறவு, பேருந்துப் போக்குவரத்து என்பனவற்றை இந்தியா மீண்டும் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் இரு தரப்புப் பேச்சுக்களை உடனே தொடங்க வேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தி வருகின்றது.

ஆனால், தற்போதுள்ள நிலையில் பாகிஸ்தானுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

மேலும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கைவிடும்படி பாகிஸ்தானை இனி வற்புறுத்த மாட்டோம்.

பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை கைவிட்டதற்கான ஆதாரங்களை பாகிஸ்தான் எப்போது அளிக்கின்றதோ அப்போது தான் இந்தியா பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி பரிசீலிக்குமௌன வெளியுறவுத்துறை அதிகாரிகள் டில்லியில் நேற்று முன்தினம் கூறியுள்ளனர்.

# தமிழக அரசிற்கெதிராக தி. மு. க. பொதுநல வழக்கு

(சென்னை)

சென்னை மெரீனாக் கடற்கரைப் பகுதிகளிலுள்ள கட்டடங்களை இடிப்பதற்கு தடைவிதிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. பொதுச் செயலாளர் மு.க. ஸ்டாலின் நேற்றுப் பொதுநல வழக்கொன்றைத் தொடர்ந்துள்ளார்.

ஸ்டாலின் தாக்கல் செய்துள்ள மனுவில் மெரீனாக் கடற்கரையில் பல்வேறு விழாக்கள், பொதுக் கூட்டங்கள் நடைபெற்ற சீரணியரங்கம் கடந்த 19ஆம் திகதி இடிக்கப்பட்டது என்று கூறியுள்ளார்.

இதேபோன்று முஹாரி ஹோட்டல், நீச்சல் குளத்தில் உடைமாற்றும் அறை இடிக்கப்பட்டதுடன் மீன் கண்காட்சியகம், நூலகம் ஆகியனவும் இடிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சுற்றுப்புறச் சூழலுக்கு எதிரான தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் மனுவில் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# அரச ஊழியர் போராட்ட முறியடிப்பு ஜெயலலிதாவுக்கு சிக்கலை உருவாக்குமா...?



தமிழகம், வேலை நிறுத்தப் போராட்டத்தால் கொஞ்சம் ஆடித்தான் போயுள்ளது. அது மட்டுமன்றி இப்படியும் எங்காவது நடப்பதுண்டா... என்று அனைவரும் தமிழக

மூலம் 2 இலட்சம் பேரை வேலை நீக்கம் செய்ததாக வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அறிவித்திருந்தது.

அதுமட்டுமன்றி 2200 பேர் வன்முறையில் ஈடுபட்டதாகவும், தூண்டிவிட்டதாகவும் கூறப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனால் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தி.மு.க., மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் போன்ற பல கட்சிகளாலும் தமிழகத்தில் அராஜக ஆட்சி நடத்துவது போன்று விமர்சிக்கப்பட்டார்.

அதுமட்டுமன்றி, வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலைப் பார்வையிட்டவர்களில் 35 பேர் திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியினால் மரணமடைந்தாகவும். அக்குடும்பங்

சிறையில் தள்ளுவதும் ஊழியர்கள், ஆசிரியர்கள் எதிர்த்தால் டெஸ்மா மூலம் சிறையில் அடைப்பதும் பழக்கமாகி விடுவது உறுதி என அவதானிகள் அதிருப்தி வெளியிடுகின்றார்கள்.

ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் மூலம் பெறமுடியாததைச் சட்டம் மூலம் பெற்றுவிட முடியும் எனும் நம்பிக்கையுடன் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தினகர், கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யவும் எஸ்மா சட்டத்தைப் பயன்படுத்தாது இருக்கவும் தமிழக அரசுக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், அவரது உத்தரவை ஒரு நிமிடம்



தமிழக ஆளும் கட்சியான அ.தி.மு.க வினருக்கு எதிரான கட்சிக்கு ஆதரவு அளிப்பவர்கள் அல்லது அக்கட்சித் தொண்டர்களாக இருக்க வேண்டும். அதனால்தான் எப்போது தருணம் கூடும் என்று பார்த்து இப்படிப் பணி

ஊழியர்கள், ஆசிரியர்களைக் கவலையுடன் பார்ப்பதுடன் இவர்களின் நிலைதான் இனியென்ன... என்று அச்சமும் வெளியிட்டுள்ளனர்.

ஆனால் சி.ஐ.டி.யூ. சங்கமோ தமிழக அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு இழைத்த அநீதியை ஐ.நா. தொழிலாளர் அமைப்பில் (I.L.O.) முறையீடு செய்யப் போவதாக எச்சரிக்கை செய்துள்ளது.

போராட்டம் நடத்திய அரச ஊழியர்களில் 2200 பேரை சிறையில் அடைத்தது; டெஸ்மா எனும் புதிய சட்டமொன்றை இயற்றி 2 இலட்சம் ஊழியர், ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்தது; வேலை நீக்க அதிர்ச்சியில் 35 பேர் மரணமானது; அரச உரிமைபெற்ற சங்கங்களினதும், உரிமை பெறாத சங்கங்களினதும் அங்கீகாரத்தை ரத்து செய்தது என்று சி.ஐ.டி.யூ. தமிழக அரசு மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏராளம்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் பரந்து விரிந்து செல்வதால், இவை அனைத்தும் ஐ.நா. தொழிலாளர் (I.L.O.) அமைப்பில் முறையிடப்படுமானால், இவற்றுக்கு எவ்வாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முகம் கொடுப்பார்; எவ்வாறு பதிலளித்து தன்னை விடுவித்துக் கொள்வார் என்பதுடன், தமிழகமும் ஐ.நா.வில் பேசப்படும் அளவுக்கு வந்துவிடுமோ... என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கக் கூட நேரமில்லை என்பது போல தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவோ, தமிழக அரச ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு சாதகமாகப் பேசிய, அறிக்கைவிட்ட, பிரதமர் வாஜ்பாயுடன் உரையாடியவர்கள் எனப் பட்டியலிட்டு, அவர்கள் அனைவரின் மீதும் வழக்கு தொடர்ந்துள்ளதுடன் அவர்களை எப்படிச் சிறைக்குள்ளே தள்ளலாம் என்று தீவிரமாக யோசித்தும் வருவதாகத்தான் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வகையில் தான், தி.மு.க. தலைவர் கருணாநிதி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செயல் தலைவர் இ.வி.கே.எஸ். இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் நல்லகண்ணு, மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் எல்.வரதராஜன் ஆகியோர் மீது எஸ்மா சட்டத்தின் ஐந்தாவது பிரிவைப் பயன்படுத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சலுகைகள் பறிக்கப்பட்டதாகவும், ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதாகவும் அவை திரும்பவும் தமக்கு வழங்கப்படக் கோரி தமிழக அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் 8 இலட்சம் பேர் கடந்த யூலை மாதம் 2ஆம் திகதி காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்திருந்தனர்.

ஆனால் தமிழக அரசோ போராட்டம் செய்பவர்களுக்கு சலுகைகளை அள்ளி அள்ளிக் கொடுத்தே கைகள் வலித்து விட்டதாகவும், இனி எதையுமே வழங்க முடியாது என்றும் உடனடியாக போராட்டத்தைக் கைவிடுமாறு எச்சரிக்கை செய்திருந்தது.

ஆனால் தனது எச்சரிக்கை பலனளிக்காது போகவே, உடனடியாக டெஸ்மா சட்டம்

கள் இனி வாழ்வது எப்படி... என்பதால் ஏற்பட்ட வெறுப்புக் காரணமாகவும் முதலமைச்சர் ஜெயலலிதாவை வசைபாடுவதாகவும், தொடர்ந்து முதலமைச்சராக இருப்பாரா... என்று அச்சம் அடைவதாகவும் கூறப்படுகின்றது.

ஆனால், இதனையெல்லாம் கவனத்தில் கொள்ள நேரமே இல்லாது இருப்பது போன்று, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவே, வேலை நீக்கம் செய்யப்பட்ட அடுத்த பட்டியலும் வெளியிடப்படும் என்று மக்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

அதுமட்டுமன்றி வேலை நிறுத்தமே செய்யமாட்டோம் எனும் கோரிக்கையுடன், 15000 பேரைப் புதிதாகவும் பணியில் அமர்த்தியுள்ளார். மேலும் மேலும் பணியாளர்கள் தேர்வு நடத்தவுள்ளதாகவும் அறிவிப்புச் செய்து அரச ஊழியர்களையும், ஆசிரியர்களையும் கலங்கடித்துக் கொண்டிருப்பதாகவும் குற்றசாட்டுக்கள் நிலவுகின்றன.

மாநிலத்தின் ஒரு பகுதிக்கு ஒருநாள் விஜயத்திற்கு மட்டும் முதலமைச்சர் செல்வதனால் 2 இலட்சம் ரூபா செலவில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதை சேவை செய்யும் அரச ஊழியர், ஆசிரியர்களுக்கு செலவிடலாமே... என்று பலரும் முணு முணுப்பதும் இல்லாமலில்லை.

ஏற்கனவே அரச ஊழியர்கள் கடந்த 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இதேபோன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கிய வேளை,

தமிழக முதலமைச்சர், போராட்டம் செய்யும் அரச ஊழியர்கள் கைதுசெய்யப்படுவார்கள்; பணி நீக்கம் செய்யப்படுவார்கள்; புதிதாகப் பணிக்கு ஆட்கள் சேர்க்கவும் படுவார்கள் என்று எச்சரித்ததையடுத்து, ஊழியர்கள் பயந்து தமது போராட்டத்தைக் கைவிட்டதாகக் கூறப்படுகின்றது.



இ.வி.கே.எஸ்.இளங்கோவன்



ஆர். நல்லகண்ணு

ஆனால், மீண்டும் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால்..... என்பது போல தமிழக அரசு எஸ்மா சட்டம் போன்று புதிய டெஸ்மா சட்டத்தைக் கடந்த யூலை 23 ஆம் திகதி முதல் பிறப்பித்துக் காத்திருக்கின்றது. இனி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால், டெஸ்மா சட்ட நடவடிக்கை அவர்கள் மீது பாயும் என்பது போல தற்போதைய நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் அரசியல்வாதிகள் தன்னை எதிர்த்தால் பொடாவில்

கூட நிலைக்க விடாது தமிழக அரசு மனுத் தாக்கல் செய்துள்ளதாக உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு, தினகரின் உத்தரவை இடை நிறுத்தியே விட்டது.

அது மட்டுமன்றி, ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் நடத்தும் உரிமையோ தார்மீகமோ பெற்ற வர்கள் அல்ல என உச்ச நீதிமன்றம் அதிரடியான தீர்ப்பைக் கடந்த 6 ஆம் திகதி வழங்கித் தமிழக அரசுக்கு நன்மையையும், ஊழியர்களுக்குத் தீமையையும் புரிந்ததாகப் பரவலாக உச்ச நீதிமன்றம் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



பணி நீக்கப்பட்ட பட்டியலை பார்வையிடும் பணியாளர்கள்.

அதுமட்டுமன்றி, தமிழக அரசின் புதிய பணியாளர்கள் சேர்த்தல் என்னும் நடவடிக்கையால், தனியார் நிறுவனங்களில் பணி புரிபவர்கள் அரசாங்க உத்தியோகம் என்று அங்கு படையெடுப்பதால் தமது அலுவலகங்கள் வெறிச்சோடிக் கிடப்பதாகவும் தனியார் நிர்வாகிகள் கவலையும் தமிழக அரசின் மீது விசனமும் வெளியிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேநேரம் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் பேரை மட்டுமே திரும்பவும் பணியில் சேர்த்துக் கொண்டுள்ள தமிழக அரசு சிறையிலுள்ளவர்கள், பணி நீக்கம் செய்யப்பட்டவர்களையும் தவிர ஏனையவர்களைப் பணியில் சேர்த்துக் கொள்வது பற்றி ஆலோசித்தே பதிலிட முடியும் என்று ஆசிரியர்கள், ஊழியர்களை தத்தளிக்க விட்டுள்ளது. அது மட்டுமன்றி, பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களிடம் இனி அரசிற்கு எதிராகப் போராட்டம் நடத்த மாட்டோம் என்று கையெழுத்து வாங்கியிருப்பது விரும்பத்தக்க தல்ல என்றும்,

போராட்டம் செய்வது ஊழியர்களின் உரிமை. "மேதினம்" கொண்டாடப்படுவதே போராடிப் பெற்ற உரிமைகளுக்காகத்தானே. ஆனால், போராட்டம் செய்வதைத் தவறு என்றும், தொழிற்சங்கங்களின் உரிமைகளை ரத்துச் செய்வதும் சர்வாதிகாரத் தன்மையைத்தான் காட்டுவதாக ஒரு சாரார் கோபப்பட்டுக் கொள்கின்றனர்.

மறுபுறம், பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும் சிறையில் அடைக்கப்பட்டவர்களும்

நீக்கம், சிறைவாசம் என்று அவர்களை வெளித்தள்ளியுள்ளார் என்றும் அவதானிகள் விவாதிக்கின்றனர்.

அதேநேரம், சாலைப் பணியாளர் தற்கொலை; மருத்துவர் போராட்டத்தால் நோயாளர்கள் மரணம்; ஊழியர்,ஆசிரியர்கள் போராட்டத்தால் மரணம்.... என்பன தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சியில்தான்

மலிந்து போயுள்ளதாக மற்றொருசாரார் கவலையும் கோபமும் கொண்டுள்ளனர்.

இவற்றுடன் புதிதாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களிடம் போதிய திறன் இல்லாமையினால், மேலதிகாரிகள் கோப்புக்களைக் கையளிக்கப் பயந்து தாமே பாதுகாப்பாகப் பூட்டி வைப்பதாகத் தலைமைச் செயலக அதிகாரி ஒருவர் வெறுப்புக் காட்டியதாகவும் தெரிய வருவதால்,

தமிழக அரச,ஊழியர்,ஆசிரியர்களின் எதிர்காலம் தான் என்ன.... என்பதுடன் தமிழக முதலமைச்சர் இவ்வாறு நடைமுறைகளைக் கைக்கொள்வதால் கட்டாயம் அடுத்த தேர்தலில் முதலமைச்சர் பதவியை இழக்க நேரிடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, பணி நீக்கம் செய்யப்பட்ட, சிறையில் அடைக்கப்பட்ட ஊழியர்கள், ஆசிரியர்கள் பணியில் சேர்த்துக்கொள்ளாத விடத்து முதலமைச்சர் மிகுந்த நெருக்கடிகளை எதிர்நோக்கக் கூடும் என்று சுட்டப்படுகின்றது.

ஏனெனில், இன்றைய நெருக்கடிகள் எதிர்வரும் தேர்தலில் பிரதி பலிக்கக் கூடும். அது மட்டுமன்றி இன்று ஜெயலலிதா டெஸ்மா சட்டம் மூலம் வழக்கு தொடரப்படுபவர்களும். சிறையில் அடைக்கப்படுபவர்களும், ஜெயலலிதாவுக்கு எதிராக கூட்டணி சேரும் வாய்ப்பும் உள்ளது.

அதுமட்டுமன்றி, இன்று வேலை நீக்கம் செய்யப்பட்வர்களும் சரி, ஏனைய அரச ஊழியர். ஆசிரியர்களும் சரி அடுத்த தேர்தலில் ஜெயலலிதாவை ஆதரிப்பார்களா.. என்பதும் பெரிய வினாவாகும்.

- ஆ. கலைவாணி -

## இந்திய காப்புறுதிக் கம்பனி கொழும்பில் இயங்க ஏற்பாடு

இலங்கையில் இந்திய காப்புறுதிக் கம்பனியான 'பஜாஜ்; அலையன்ஸ்' பொது காப்புறுதிக் கம்பனி தனது நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளது.

விரைவில் கொழும்பில் அலுவலகம் ஒன்றையும் இக்கம்பனி திறக்கவுள்ளது.

இந்தியாவின் ராகுல் பஜாஜ் பஜா ஓட்டோ கம்பனி, ஜேர்மனிய கம்பனி என்பன கூட்டாக இதில் ஈடுபட்டுள்ளன.

இந்திய அரசுக்குச் சொந்தமான ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே இலங்கையில் செயற்பட்டு வருவது தெரிந்ததே.

## அரச ஊழியர் சம்பள முரண்பாடுகள் கடந்த ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டது

### மூன்றாம் நிலை கல்வியமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் சங்கம் முன்வைத்துள்ள 28 கோரிக்கைகளில் 19 கோரிக்கைகளுக்கு தீர்வுபெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக மூன்றாம் நிலை கல்வியமைச்சர் கபீர் காசிம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். கல்விசாரா ஊழியர்களுக்கு 1000 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் அதனை அச்சங்கத்தினர் நிராகரித்துள்ளதாகக் கூறியுள்ளார். சம்பள உயர்வு தொடர்பாக மூன்று கோரிக்கைகளை கல்விசாரா ஊழியர் சங்கம் முன் வைத்துள்ளதாக கூறிய அமைச்சர், அக்கோரிக்கைகள் தொடர்பாக நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் அவர் கூறியுள்ளார்.

இம்மூன்று கோரிக்கைகளுக்கமைய சம்பள உயர்வு வழங்குவதற்கு 55 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் கடந்த ஆட்சிக் காலத்திலிருந்து சம்பள முரண்பாடு நிலவி வருவதாகவும் விஞ்ஞான பட்டதாரி ஒருவர் எடுக்கும் சம்பளத்தை விட பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் சாரதி ஒருவர் எடுக்கும் சம்பளம் அதிகமாகவுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# 20 வருட சிறிலங்கா இராணுவ தாக்குதல்களால் மட்டு-அம்பாறையில் 68,000 தமிழர்கள் உயிரிழப்பு

(அலுவலக செய்தியாளர்)

**கடந்த 20 வருடங்களாக நடைபெற்றுவந்த இராணுவத் தாக்குதல் காரணமாக மட்டு-அம்பாறை மாவட்டங்களில் 68,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் உயிரிழந்துள்ளனரெனத் தெரிய வந்துள்ளது.**

இக்காலப்பகுதியில், மட்டு-அம்பாறையிலுள்ள 17 பிரதேச செயலர் பிரிவுகளில் வாழ்ந்து வந்த மக்கள் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்து வாழவேண்டிய அவல நிலைக்கு ஆளாகியுள்ளனர். இவர் கள் இன்று வரையும் இயல்பு நிலைக குத் திரும்ப முடியாமல் பெரும் சிர மத்துடன் வாழ்ந்து வருவதாகவும் இவர்களில் பெரும்பாலான குடும் பங்கள் தமது சொந்தக் கிராமங் களில் சுயமாகத் தமது சொந்த வீடுகளை அமைத்துக் கொள்ள முடியாத நிலையில்வசித்து வருகின்றனர்.

இவர்கள் பொருளாதாரத்தில் பல வீனமுற்றநிலையில் மற்றும் பெண்தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்கள், தாய்தந்தையரை இழந்த சிறுவர்களின் குடும்பங்கள், அங்கவீனம் உற்ற உழைப் பாளிகளின் குடும்பங்கள், உழைப் பாளிகளைப் பறிகொடுத்து நிற்கும் குடும்பங்கள் எனப் பல தரப்பட்ட அவல நிலையில் அங்கு தற் போதும் மக்கள் வாழ்ந்து வருவ தாக தமிழர் புனர்வாழ்வுக்கழகக் குறிப்பேட்டின் மூலம் தெரிய வந்துள்ளது. (சோ).

## பேருந்து மீது கல் வீச்சு

கொழும்பிலிருந்து காத்தான் குடி நோக்கிச் சென்று கொண்டிருந்த நியூஈஸ்டன் பேருந்துக் கம்பனிப் பேருந்து கல்வீச்சுக் கிலக்காகிச் சேதமடைந்துள்ளது. திங்கட்கிழமை இரவு 9.15 மணியளவில் இப் பேருந்து சித்தாண்டியால் வந்துகொண்டிருந்த போதே கல்வீச்சுக்குள்ளானது.

## ஈ.பி.டி.பி.க்கு பாதுகாப்பு வழங்க சனாதிபதி மாரப்பனவுக்குக் கடிதம்

ஈ.பி.டி.பி. மற்றும் குழுக்களின் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப் பமைச்சர் திலக் மாரப்பனவிற்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அரசின் வேண்டுகோளிற்கமைய பல ஆண்டுகளின் முன்னர் ஈ.பி.டி. பி.யும் ஏனைய சில குழுக்களும் ஆயுதங்களைக் களைந்து அரசியல் நீரோட்டத்திலும் இணைந்து கொண்டதாக அவர் கூறியுள்ளார். யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச் சாத்தாகிய பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நீக்கப் பட்டதெனச் சுட்டிக்காட்டிய அவர் இராணுவமும் பொலிசும் அவர், களுக்குப் போதிய தனிப்பட்ட பாது காப்பை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்வேண்டுமெனவும் அது குறித்து ஒரு வாரத்தினுள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரி வித்துள்ளார்.

## பூநகரி பி. ச. எல்லைக்குள் 'லஞ்சீற்' பாவனைக்குத் தடை

கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் குழுத் தீர்மானத்தின் பிரகாரம், பொலித்தீன், லஞ்சீற் பாவனையைத் தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத் தீர்மானத்திற்கு அமைவாக, எதிர்வரும் 15.09.2003 திகதி முதல் பூநகரிப் பிரதேச சபை எல்லைக்குட் பட்ட உணவகங்களில் லஞ்சீற் பாவனை தடைசெய்யப்படவுள்ளது. இதற்குப் பதிலாக வாழை இலை, தாமரை இலை போன்றவற்றைப் பயன்படுத்தி, சுகாதார மேம் பாட்டிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு பூநகரிப் பிரதேச விசேட ஆணை யாளர் க.தனபாலசிங்கம் கேட்டுள் ளார்.

## இரவுநேர ஊரடங்கு

மூதூர் பொலிஸ் பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு 9.00 மணிக்கு அமுல்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச்சட்டம் நேற்றுக்காலை 4.00மணிக்கு நீக்கப்பட்டதாக மூதூர் பொலிசார் தெரிவித்துள்ளனர்.இப் பிரதேசத்தில் சட்டத்தையும், ஒழுங் கையும் நிலைநாட்டும் முகமாக பொலிஸ் ஊரடங்கு அமுல்ப்படுத் தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்க ரணில் உத்தரவு

(லண்டன்)

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பிற்குத் தேவையான நடவ டிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறிலங்காப் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற அசம் பாவிதங்கள் தொடர்பாக சிறி. முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கடந்த திங்களன்று இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார். இப்பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் ஹக்கீம் கிழக்கு மாகாண நிலைமைகுறித்து பிரதமருக்கு விளக்கியதுடன் முஸ்லிம்களுக்கான பாதுகாப்பை அரசு வழங்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

இச்சந்திப்பின்போது அமைச்சர் களான மிலிந்த மொறகொட, ஜோன்அமரதுங்க, திலக்மாரப்பன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப் பன தலைமையில் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் காலை விசேட மாநாடு ஒன்று நடை பெற்றது.

இந்த மாநாட்டில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் சிறி. முஸ்லிம்காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, முப்படைத்தளப திகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடைமுறை கள் குறித்து பல முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## நிறை குறைந்த குழந்தைகள் பிறப்பு மலையகத்தில் உயர்வு!

பொகவந்தலாவை, மஸ் கெலியா ஆகிய பிரதேசங்களி லுள்ள தோட்டப் பகுதிகளில் நிறை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகரித்துள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

தேசிய ரீதியில் நிறை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் 5 ஆகக் காணப்படும் அதேவேளை, பெருந்தோட்டங் களிலும் இவ்வீதம் 9 ஆகக் காணப்படுகிறது.

இவ்வாண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் பொகவந்தலாவை, மஸ்கெலியா ஆகிய பிரதேசங் களிலுள்ள தோட்டப் பகுதிகளில் 491 குழந்தைகள் பிறந்துள்ளன. இவற்றுள் 43 குழந்தைகள் நிறை குறைந்து காணப்பட்டன. பெருந் தோட்டப் புறங்களில் தாய் சேய்நலம், கர்ப்பிணித் தாய்மார் பராமரிப்புத் தொடர்பில் உரிய கவனம் செலுத் தப்படாமையே இதற்குக் காரணம் எனச் சுட்டிக் காட்டப் படுகின்றது.

## - கிழக்கில் பாதுகாப்பை பலப்படுத்த - எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் திருப்தி

கிழக்கில் பாதுகாப்பைப் பலப் படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கைகள் குறித்து தாம் திருப்தி அடைவதாக ரவூப் ஹக்கீம் கூறி யுள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள் ளார். அத்துடன் மீண்டும் யுத்த நிலைமையை ஏற்படுத்துவதற் கான ஒரு தயார் நிலையாக இதனைக் கருதக்கூடாதெனவும் தற்போதைய சமாதான முயற்சியை நிறுத்தக்கூடா தெனவும் எந்தவொரு தரப்பினரும் யுத்தத்தை ஆரம்பிக்கக்கூடாதெனவும அவர் கூறினார். குறைபாடுகளைத் திருத்தி சமாதான முயற்சியை முன் னெடுப்பது அவசியம். தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை களை நடத்த தாம் தயாராகவுள்ள தாகவும் கூறியுள்ளார்.

முஸ்லிம் தரப்பினரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் வேளையில் அரசைவிட்டு விலகுவது ஒரு தீர்வாக அமைய மாட்டாதென செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

முஸ்லிம் இளைஞர்கள் ஆயு தங் களைக் கையிலேந்தும் எண்ணத் தைக் கொண்டிருப்பதாக வெளிவந் துள்ள வதந்தியையும் அவா நிராகரித்தார்.

## -கிளி-மாவட்ட அரசினர் வைத்தியசாலையில்- வைத்தியர்கள் பற்றாக்குறையினால் நோயாளர் பலமணிநேரம் காத்திருப்பு!

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் தற் போது நோயாளரின் வருகை அதிகரித்துள்ளதனைக் காணக் கூடியதாகவுள்ளது. தினமும் 700க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதிகளில் சிகிச்சை பெற்றுச் செல்வதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வைத்தியசாலையில் நிலவிவரும் வைத்தியர் பற்றாக்குறை காரணமாக மேற்படி வெளிநோயாளர் பகுதியில் பெருந்திரளான நோயாளர்கள் பலமணி நேரம் காத்திருந்தே சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



## -கிளிநொச்சி மாவட்டத்தில்- ஜீவனோபாய உதவித்தொகை 7000 குடும்பங்களுக்கு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு அவசர புனர்வாழ்வு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் 'நெக்கோட்" நிறுவனத்தினரால் கிளி.மாவட்டத்தில் இதுவரை மீளக் குடியமர்ந்த 7000 குடும்பங்களுக்கு ஜீவனோபாய உதவித்தொகை 175 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 47 கிராமங் களைச் சேர்ந்த 4564 குடும்பங்களுக்கும்,பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 29 கிராமங்களைச் சேர்ந்த 961 குடும்பங்களுக்கும், கண்டாவளைப் பிரதேச செயலர்பிரிவில் 23 கிராமங்களைச் சேர்ந்த 818 குடும்பங்களுக்கும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில்16 கிராமங்களைச் சேர்ந்த 657 குடும்பங்களுக்குமாக மொத்தம் 7000 குடும்பங்களுக்கு 175 மில்லியன் ரூபா நெக்கோட் நிறுவனத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட ஜீவனோபாய உதவித்தொகை இதுவரை வழங்கப் பட்டுள்ளதாக நெக்கோட் நிறுவனப் பிரதித் திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ)

## சிறிலங்கா பொலிஸ் தலைமையக பாதுகாப்பு திடீரென அதிகரிப்பு!

(கொழும்பு)

கொழும்பில் பொலிஸ் தலைமை யகத்தின் பாதுகாப்பு மேலும் பலப் படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தின் 04 நுழைவாயில்களிலும் மேலதிகப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதுடன், புதிதாக பாதுகாப்பு கம்பிவேலிகளும் அமைக்கப்பட் டுள்ளன.

சயித்திய வீதி, யோர்க் வீதி, பஸ்ரியன் வீதி, சேரன் ஜயதிலக வீதிகளிலேயே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட் டுள்ளன.

இதேநேரம், பொலிஸ் தலைமை யகத்தைச் சுற்றி பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டுள்ளதுடன், சீருடை யிலும், சிவிலுடையிலும், பொலிசார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

முன்னெச்சரிக்கையாகவே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

## சிங்கள தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனத்திற்கு ஏற்பாடு

வடக்குக் கிழக்கு மாகா ணத்திலுள்ள சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் கடமை யாற்றும் சிங்கள மொழி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந் தர நியமனம் வழங்க மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே 193 தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 325 தொண்டர் ஆசிரியர்களுக் கான நியமனம் வழங்குவதற் காக மாகாணக் கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண சபை
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
'ஆஅவ' கடன் இல. 1846 - SRI(SF)

# கேள்வி அறிவித்தல்-21

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்.

1. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2 இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

அட்டவணை

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப் பணம். (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | KN/NECORD/IR/03 | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குள கால்வாய் புனர் நிர்மாணம் -தொகுதி 1 (முதல்நிலை வேலைத் தொகுதி) | M4 | 204,000/= |
| | | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குள கால்வாய் புனர் நிர்மாணம் -தொகுதி 2 (முதல்நிலை வேலைத் தொகுதி) | M6 | 73,000/= |
| | | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குள கால்வாய் புனர் நிர்மாணம் -தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M6 | 63,000/= |
| | | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குள கால்வாய் புனர் நிர்மாணம் -தொகுதி 4 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 22,400/= |
| 02. | KN/NECORD/IR/01 | கிளிநொச்சி மாவட்டத்தில் புதுமுறிப்புக் கால்வாய் புனர் நிர்மாணம் -தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 23,000/= |
| 03. | MU/NECORD/IR/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு கால்வாய் புனர் நிர்மாணம் -தொகுதி 2 (வாய்க்கால் அமைப்பு) | M6 | 62,000/= |
| | | முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு கால்வாய் புனர் நிர்மாணம் -தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 20,000/= |
| 04. | MU/NECORD/IR/05 | முல்லைத்தீவு மாவட்டத்தில் மடவலசிங்குகுள கால்வாய் புனர் நிர்மாணம் -தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M5 | 179,000/= |
| | | முல்லைத்தீவு மாவட்டத்தில மடவலசிங்குகுள கால்வாய் புனர்நிர்மாணம் -தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 29,000/= |
| 05. | TC/NECORD/IR/02 | திருகோணமலை மாவட்டத்தில் எதண்டமுறிப்பு கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 1 (முதல்நிலை வேலைத் தொகுதி) | M6 | 85,000/= |
| | | திருகோணமலை மாவட்டத்தில் எதண்டமுறிப்பு கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 2 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 33,000/= |
| | | திருகோணமலை மாவட்டத்தில் எதண்டமுறிப்பு கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 3 (செல்லும் வழி) | M7 | 33,000/= |
| 06. | AM/NECORD/RD/01 | அம்பாறை மாவட்ட லதுகல பாலம் புனரமைப்பு | M6 | 91,000/= |

3.பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

(i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("ICTAD" உடன் மேற்படி M7 க்கு மேலே பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.

(iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இருஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் /அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

(iv) இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

(V) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. மேற்படி பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நீகோட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும். 2003 ஆடி 1 ந்திகதிக்கு பின்பு தங்களைப் பதிவு செய்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டத்தைச்சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ, அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகச் செய்திருந்தால் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒரு நேரத்தில் ஆகக்கூடுதலாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம் பார்க்க)



உலகில் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொது சனங்களே.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-08-2003

## புதிய அணுகுமுறையா?

நாளுக்கு நாள் வடக்கு கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் ஊடுருவல்கள் அதிகரித்துள்ளன. இதனால், வடபகுதி மீனவர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதோடு, அவர்களுக்குப் புதிய நெருக்கடிகளும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

தமிழக மீனவர்களின் ஊடுருவல் காரணமாக, வடபகுதி மீனவர்களின்தொழில்நடவடிக்கைகள் பாதிப்பிற்குள்ளாவதோடு அவர்களின் மூலதனத்திற்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளமை ஒருபுறம் இருக்க, இன்று அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்களை மடக்கிப் பிடிப்பதினாலும் அவர்களுக்குப் புதிய புதிய சிக்கல்கள் எழத் தொடங்கியுள்ளன. அதாவது, தமிழக மீனவர்களைப் பிடிக்கும் வடபகுதி மீனவர்கள் சிறிலங்கா ஆயுதப் படையினரதும் - பொலிசாரினதும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளனர்.

தமிழக மீனவர்களின் தற்போதைய ஊடுருவலானது வழமைக்கு மாறானதொன்றாகும். கடந்த காலங்களிலும் தமிழக மீனவர்களின் ஊடுருவல் இருந்தே வந்ததாயினும் அது மிகவும் குறைந்த அளவிலானதாக இருந்தது மட்டுமல்ல, சிறிலங்கா கடற்படையால் ஒரு தடவை தடுத்து நிறுத்தப்படின் பின்னர் சிறிது காலத்திற்கு இத்தகைய ஊடுருவல்கள் இருப்பதில்லை.

ஆனால், தற்பொழுது சூழ்நிலை அவ்வாறானதாக இல்லை. சிறிலங்கா கடற்படை தமிழக மீனவர்களைத் தடுத்து நிறுத்தாமையால் வடபகுதி மீனவர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்த முனைகின்றனர். இதனால், அவர்கள் பிடிக்கப்பட்டு வடபகுதிக்குக் கொண்டு வரப்படுவதோடு சில சமயங்களில் சிறைச்சாலைகளில் இருக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

இதனால், தொழில் நடவடிக்கை பாதிப்பு, சிறைவாசம் என்பன ஏற்படினும் கூட தமிழக மீனவர் ஊடுருவலைக் கைவிடுவதாக இல்லை. மாறாகத் தொடர்ந்தும் அதிகரித்த போக்கே காணப்படுகின்றது. இந்நிலையில்தான் இவ்வூடுருவல்கள் குறித்துப் புதிய சந்தேகங்களும், ஐயங்களும் ஏற்படத் தொடங்கியுள்ளன. அதாவது, இவ்ஊடுருவல்கள் திட்டமிட்ட ரீதியில் தொழில் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையா என்ற கேள்வி எழுகிறது.

ஏனெனில், தமிழக மீனவர்களின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்த சிறிலங்கா கடற்படைகள் முனையவில்லை என்பது மட்டுமல்ல, இந்திய கடற்படையோ அன்றிக் கரையோரக் காவற்படையோ கூட தடுத்து நிறுத்த முனையவில்லை என்பதே உண்மை நிலையாகும். ஆனால் இந்திய கடற்படையோ கரையோரக் காவற்படையோ இவ் ஊடுருவுவதைத் தடுத்து நிறுத்துதல் என்பது கடினமானதொரு காரியமல்ல.

அத்தோடு, தமிழக அரசும் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகள் எதையும் செய்வதாகத் தெரியவில்லை. குறைந்த பட்சம் தமது எல்லைக்கு அப்பால் மீன் பிடிக்கச் செல்லவேண்டாம் எனத் தமது மீனவர்களுக்கு அது அறிவுறுத்தக் கூட இல்லை. ஆகையினால். இவ்வூடுருவல்களுக்கு தமிழக அரசினதும் மறைமுக ஆதரவு உண்டோ என்ற சந்தேகம் தவிர்க்க முடியாததாகிறது.

இந்த நிலையில் தான் தமிழக மீனவர்களின் ஊடுருவல் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் புதிய தலையீட்டிற்கான ஓர் அணுகுமுறையா? என்ற கேள்வியை எழுப்புகின்றது. அதாவது மீனவர்களின் பிரச்சினையில் இருந்து தொடங்கி இனப்பிரச்சினை விவகாரம் வரையில் தமது தலையீட்டைச் செய்வதற்கு இந்தியா தயாராகின்றதா? எனச் சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

ஏற்கனவே கச்சதீவு விவகாரம் தொடர்பாகச் சர்ச்சை எழுப்பிவரும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, தற்போதைய மீனவர் பிரச்சினையையும் அரசியலாக்கி கையில் எடுக்கும் நிலையில் இந்திய அரசும் இதனைப் பயன்படுத்தி இலங்கை விவகாரத்தில் புதிய தலையீடுகளுக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

ஆனால், இதுவே இந்தியாவின் புதிய அணுகு முறையாக இருப்பின் இது ஒரு தவறான மார்க்கமாகவே இருக்கும். ஏற்கனவே ஒரே வயிற்றுப் பிள்ளைகள் போன்றிருந்த இலங்கைத் தமிழ் மக்களும் - தமிழக மக்களும் இந்திய அரசின் தவறான கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், இத்தகைய தொரு அணுகு முறையானது. அவர்களிற்கிடையில் மேலும் மனக் கசப்புக்களை உருவாக்கவே வழிவகுப்பதாக இருக்கும்.

ஆகையினால், இத்தகைய செயல்களுக்கு இந்திய அரசு ஆதரவளிக்காது, இனப்பிரச்சினையில் தலையீடு செய்ய விரும்பின் நேரடியாக ஈடுபடுவது சிறந்த வழிமுறையாகும். இந்தியாவும் சரி, தமிழகமும் சரி இலங்கைத் தமிழ் மக்களுடன் புதிய சிக்கல்களை உருவாக்காது நேர் வழியில் செயற்படுவது பொருத்தமானதும் நேர்மையானதும் கௌரவமானதுமாகும்.

## ஜே.வி.பி.யுடன் அமையும் கூட்டணியில் சுதந்திரக் கட்சியின் பலம் அதிகரிக்கும்

### -ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம நம்பிக்கை

ஜே.வி.பி- சு.க.கூட்டணியுடன் அமையும் ஆட்சியின் மூலம் சுதந்திரக். கட்சியின் பலம் மிகவும் அதிகரிக்கும் என பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த அரசு எமது கூட்டணியில் பிளவை ஏற்படுத்த எவ்வளவுதான் முயன்றாலும் அவற்றை முறியடித்து ஜனநாயகத்தைக் காப்பாற்றும் மனிதநேயம் கொண்ட மக்களாட்சியை விரைவில் உருவாக்கவுள்ளதாகவும் அதற்கான காலகட்டம் நெருங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாலாபே என்ற இடத்தில் 'ரிச்புட்' மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் மேலும் பேசும் போது, நாட்டுக்கும் மக்களுக்கும் பயனளிக்கக் கூடிய எந்த செயற்பாட்டையும் இவ்வரசாங்கம் ஒழுங்காக நிறைவேற்றவில்லை.

இந்த நாட்டில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வருடம் ஒன்றிற்கு எண்ணாயிரம் கோடி ரூபாவை யுத்தத்துக்குச் செலவு செய்து கொண்டும் ஒவ்வொரு வருடமும் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளத்தை அதிகரித்தும் வீதிகளையும் நீர்ப்பாசனத் திட்டங்களையும் புனரமைத்துக் கொண்டு சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்கி மேலும் புதிய திட்டங்களையும் சந்திரிகா செய்தார். ஆனால் அதில் ஒரு சிறுதுளி கூட இந்த அரசு செலவு செய்யவில்லை.இன்று யுத்தத்துக்குச் செலவு செய்யப்படுவதில்லை. வேலைவாய்ப்புக் கிடையாது. சம்பள அதிகரிப்பு இல்லை. அவ்வாறிருந்தும் மிகுதியாகும் நிதி ஊழல் மோசடிகளுக்கு உள்ளாகிறது. அதனால் நீதிமன்ற விசாரணைகளுக்கு உள்ளாகின்றனர்.

இவ்வரசாங்கம் எமது அரசாங்கத்தில் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளில் ஒன்றையாவது தொடர்ந்து செய்யவில்லை. வறுமையிலும் பட்டினிச்சாவிலும் உழலும் நாட்டையே ஐ.தே.க.அரசு நடத்தி வருகிறது.

50 வருடம் பழமையான சிறி.சுதந்திரக்கட்சி இலங்கைக்குச் செய்த பணி அளப் பரியது. அதனைச் சிந்திக்காத யாரும் அரசியல் பற்றிப் பேச முடியாது.

ஊடகங்களும் அரசும் அரசியல் சூழ்ச்சி மூலம்ஆட்சி நடத்துவோரும் எமது கூட்டணி பற்றித் தேவையற்ற விமர்சனங்களைக் கூறுகின்றனர். எனினும் முன்னரைவிட மக்களின் பலத்தைப் பெற்று சக்திவாய்ந்ததாகக் கூட்டணி அமைந்திருக்கிறது. மக்கள் எமக்குப் பின்னே திரண்டிருக்கிறார்கள் இவ்வாறு சரத் அமுனுகம கூறியுள்ளார்.

## பாராளுமன்றிற்கு வெளியே உறுப்பினரை கட்டுப்படுத்தும் அதிகாரம் எனக்கில்லை

### -சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்கு வெளியில் நடைபெறும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எந்த நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் தமக்குக் கிடையாது என சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறியுள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் அண்மையில் பொ.ஐ.மு. உறுப்பினர் ஜனக பண்டார தென்னகோனின் அடாவடித்தனம் தொடர்பாக தம்புள்ள மாவட்ட நீதிபதி விடுத்த உத்தரவு பற்றி ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது சபாநாயகர் இவ்வாறு கூறியுள்ளார்.

பாராளுமன்றத்துள் நடைபெறும் எதனையும் தட்டிக் கேட்கும் உரிமை தமக்கு இருப்பினும் வெளியில் பொலிசாரினால் கைது செய்யப்படுதல், விசாரித்தல் போன்றவை பற்றி ஆராயத் தமக்கு அதிகாரம் கிடையாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுபவருக்கு குடியுரிமையை நீக்க வேண்டும்

### - அமைச்சர் கருஜெயசூரிய கூறுகிறார்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு அவர்களது குடியுரிமையை பறித்தல் போன்ற கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டுமென அமைச்சர் கருஜெயசூரிய கூறியுள்ளார்.

தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அவற்றை கட்டுப்படுத்துவதற்கு இது போன்ற நடவடிக்கைகள் அத்தியாவசியமானவையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பொது மக்களின் வாக்களிக்கும் உரிமையை பறிக்கமுனையும் செயல்கள் மனிதாபிமானத்திற்கு இழுக்கானவையென அவர் வர்ணித்துள்ளார்.

ஒழுக்கம் நிறைந்தவர்களை வேட்பாளராக தெரிவு செய்வதற்கு அரசியல் கட்சிகள் ஊக்கம் காட்டினால் இந்நிலையை மாற்ற முடியுமென அவர் கூறியுள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்குத் தேவையான அனைத்து வளங்களையும் பெற்றுக்கொடுக்க அரசு தயாராகவுள்ளது. ஆனால் தேர்தல் முறை மாற்றியமைக்கப்படுவது அத்தியாவசியமானதென அவர் மேலும் கூறியுள்ளார்.

## 12 ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைவு

(கொழும்பு)

கடந்த 2002 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலின் போது குவான்வெல தேர்தல் தொகுதி ஜே.வி.பி அபேட்சகராக இருந்த ருக்மன் ரணவீர உள்ளிட்ட 12 ஜே.வி.பி உறுப்பினர்கள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.

சமுதாயத்தை நிர்க்கதியில் விடுதல், பயனற்ற கொள்கைகளைக் கொண்டிருத்தல், கட்சி வெற்றிபெற உயிரைப் பணயம் வைத்து வேலை செய்தும் தமக்கு நன்மை கிடைக்காமை போன்ற காரணங்களினால் தாம் மேற்படி கட்சி மாறியதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ருக்மன் கருத்துத் தெரிவிக்கும் போது, தமக்கு விரும்பிய கட்சியில் ஒருவர் இணைவதும் அபிவிருத்திக்காக உழைப்பதும் அவரவர்க்கு உரிய உரிமையாகும் என்று கூறினார்.


## 3-வது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து தன் நிலையை சமப்படுத்தியது

புதிய அணித்தலைவரைக் கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்கா அணியுடன் விளையாடிய 3வது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றுள்ளது. ஐந்து போட்டிகளைக்கொண்ட இப் போட்டித்தொடரை இப்போது இங்கிலாந்து அணி 1-1 என்ற நிலையில் சமன் செய்துள்ளது.

கடந்த வியாழனன்று ஆரம்பமான இப்போட்டியில் முதலாவது இனிங்சில் இங்கிலாந்து அணி 445 ஓட்டங்களும், தென்னாபிரிக்கா முதல் இனிங்சில் 362 ஓட்டங்களையும் பெற்றன.

பின்னர் இரண்டாவது இனிங்சில் 118 ஓட்டங்களை எடுத்த இங்கிலாந்து அணி தென்னாபிரிக்க அணிக்கு 202 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது. இரண்டாவது இனிங்சை விளையாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி இங்கிலாந்தின் ஜேம்ஸ் கர்ட்லியின் பந்து வீச்சில் மிகவிரைவில் 131 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

இதனால் 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக ஜேம்ஸ்கர்ட்லி அறிவிக்கப்பட்டார்.




## மருத்துவமனையில் பயஸ்!

இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் மூளை ஷெல்களில் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக அமெரிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஏ.சி.சி போட்டிகளில் விளையாடுவதற்காகச் சென்றிருந்த பயசுக்குக் காய்ச்சலும், கடும் தலைவலியும் ஏற்பட்டது. இதனையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இவரைப் பரிசீலித்த மருத்துவர்கள், அவரது மூளையின் இடது பக்கத்தில் ஷெல்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர்.

இந்தப் பாதிப்பிற்கான காரணம் பற்றி அவர்கள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்.

# அம்பாறையில் அதிரடிப் படையினரின் யுத்த நிறுத்த மீறல் குறித்து முறையீடு

(அம்பாறை)

அம்பாறையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட போர் நிறுத்த மீறல் தொடர்பாக கண் காணிப்புக் குழுவிடம் முறையிடப் பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகம் இயங்கும் காஞ்சிரங்குடா-காவட்ட என்னுமிடத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான சந்திப்பில் கலந்துகொள்வதற்காகச் சென்ற வீரமுனை விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் போராளிகளும் விசேட அதிரடிப் படையினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டார்கள். பின்னர் கண்ணி வெடிகளை வைத்து வாகனங்களை முன்னேறவிடாது விசேட அதிரடிப் படையினர் அச்சுறுத்தியுள்ளனர். பின்னர் புலிகள் - அதிரடிப்படையினருடனான பேச்சுவார்த்தையையடுத்து விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் போராளிகளும் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தற்போது பல்வேறு பொது நிறுவனங்கள், பொது அமைப்புக்களுடன் இணைந்து மக்கள் மறுவாழ்வுச் செயற்றிட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், இவற்றைக் குழப்பியடித்து மீண்டும் போருக்குத் தூபமிடும் வகையில் சிறிலங்காவின் விசேட அதிரடிப் படையினர் செயற்பட்டு வருவது விசனத்திற்குரியது என மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலன்பன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறையிட்டுள்ளனர்.

## அதிபர்கள் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

உலக உணவு நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கான உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நிறுவனத்தினால் உணவுப் பொருட்கள் பூநகரி கோட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதால் அந்தந்தப் பாடசாலை அதிபர்களை நாளை பாடசாலைகளில் நிற்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (பா)

# கணினிப் பயிற்சிபெற்ற 58 பேருக்குச் சான்றிதழ்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சமுதாய முன்னேற்ற நிலையமும், கிளிநொச்சி வலய கல்வித் திணைக்களமும் இணைந்து வடக்கு தொழிற் பயிற்சி நிலையத்தால் நடாத்தப்பட்ட கணினிப் பயிற்சி நெறியின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நிறுவன நிர்வாக அலுவலர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.



தளபதி தமிழ்ச்செல்வி சான்றிதழ் வழங்குகிறார்.

நேற்று பகல் 10.15 மணியளவில் மேற்படி நிறுவன மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி. அரச அதிபர் தி. இராசநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மாலதி படையணித் தளபதி தமிழ்ச்செல்வி, கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன். நித்தியானந்தன், டாக்டர் கோபால பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், கிளி. மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியினை மாலதி படையணித் தளபதி தமிழ்ச் செல்வி ஏற்றி வைத்தார்.

கருத்துரைகளைத் தொடர்ந்து கணினிப் பயிற்சியினை நிறைவு செய்த 58 பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் துறைசார் நிறுவனப் பிரதிநிதிகள், சகல படையணிப் போராளிகள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

- மட்டு.சத்துருக் கொண்டானில் -

# பயணிகள் வான் ஆற்றில் வீழ்ந்தது 12 பெண்கள் உட்பட 28பேர் காயம்

மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை நோக்கி சென்று கொண்டிருந்த தனியாருக்கு சொந்தமான வான் ஒன்று ஆற்றில் வீழ்ந்ததில் 20ற்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்துள்ளனர்.



காயமடைந்தவர்களில் 12பேர் பெண்களும், 16பேர் ஆண்களுமாவார்கள், இவர்கள் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மு.ப 11.00 மணியளவில் மட்டக்களப்பு-திருமலை வீதியிலுள்ள சத்துருக்கொண்டான் என்னுமிடத்தில் இடம்பெற்றுள்ளது

## பொலிஸ் தலைமையக பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் சிறிலங்கா பொலிஸ் தலைமையகத்தின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நான்கு நுழைவாயில்களிலும் மேலதிக பொலிசார் கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளதுடன் புதிதாக முட்கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பொலிஸ் தலைமையகத்தில் சீருடையிலும் சிவில் உடையிலும் பாதுகாப்புக் கடமையில் பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# வட-கிழக்கு பிரிப்புக் குறித்து சனாதிபதி உரிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பார்

- சனாதிபதியின் பேச்சாளர் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பை நீடிக்க சமயத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பரிசீலித்து வருவதாகவும், அது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பார் எனவும் சனாதிபதியின் பேச்சாளர் கரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வடக்கு-கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது. கிழக்கு மாகாணத்தில் தமது உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும்படி மக்களும் சமயத் தலைவர்களும் சனாதிபதியிடம் கேட்டுள்ளனர். கண்காணிப்புக்குழுவில் மக்கள் நம்பிக்கையிழக்கத் தொடங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழீழ...

கனின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் அவர்கள் அணிவித்தார்.

புகைப்படக் கண்காட்சி மண்டபத்தினை கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து கண் காட்சி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த புகைப்படங்களுக்கு தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் விளக்கமளித்தார்.

மேற்படி கண்காட்சியில் சிந்துவெளி கால நாகரீகம் தொட்டு, தற்காலம் வரையும் தமிழர்கள் வாழ்ந்தமைக்கான சான்றாதாரங்களும் தமிழ் இனமக்கள் காலம் காலமாக அழிக்கப்பட்ட சம்பவங்களைச் சித்தரிக்கின்ற புகைப்படங்களும். அது தொடர்பான வரலாறுகளும் உள்ளன. இக்கண்காட்சி நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தினமும் காலை 9.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை நடைபெறவுள்ளது. (பா)

## தமிழ்..

நியமிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கல்முனை மூதூர் ஆகிய பொலிஸ் பிரதேசங்களிலேயே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்மூன்று பிரதேசங்களுக்கும் அண்மையில் விஜயம் செய்த படை உயர்அதிகாரிகளுக்கும் மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்குமாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## பயிர்ச்...

குழு என்பவற்றிற்கு அந்தப் பகுதி மக்கள் கையொப்பமிட்டு முறைப்பாடுகளை அனுப்பிவைத்துள்ளனர்.

கடந்த வருடமும் அந்தப்பகுதியில் படையினர் பல தடவைகள் தற்காலிக முகாம்களை அமைத்து தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# முகமாலையில் படையினரால் கைதான இருபோராளிகளுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் நேற்று முன்தினம் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த இரண்டு போராளிகள் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கந்தசாமி புகழ்மாறன், யோகராஜா மாயவன் ஆகியோரே பிற்பகல் 2.00 மணியளவில் முகமாலை காவலரணில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் கொடிகாமத்திலுள்ள சிறிலங்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி நீதிமன்றில் முன் நிறுத்தப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் சென்றபோது இவர்கள் இருவரும் படையினரால் கைது செய்யப்பட்டபோதும் கைதிற்கான காரணம் இதுவரை உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை.

இவர்கள் கைது செய்யப்பட்டபோது சனைற் அருந்தப்போவதாக கூறியதாகவும் அந்த சயனைற் வில்லைகளையும் போராளிகளுக்கான அடையாளஅட்டைகளையும் படையினர் பறிமுதல் செய்து நீதிமன்றில் ஒப்படைத்தபோது அவற்றை விடுதலைப்புலிகளின் யாழ்.அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் சிறிலங்காப் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# பொற்பதி இராணுவ முகாமை அகற்ற கடிதங்களை மீளப் பெற வற்புறுத்து

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கின் பொற்பதி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமை அகற்றுவதாயின் சர்வதேச கண்காணிப்புக்குழு மற்றும் மனித நேய ஆணைக்குழு என்பவற்றிற்கு அப்பகுதி பொது அமைப்புக்களால் வழங்கப்பட்ட மகஜர்களைவாபஸ் பெற வேண்டுமெனப் படைத்தரப்பு நேரடியாக அறிவித்து வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அப்பகுதி மீனவ சங்க பிரமுகர் ஒருவர் படையினரால் மோசமாகத் தாக்கப்பட்டதாகவும் இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்களை வாபஸ் பெற்றுக் கொண்டால் மாத்திரமே தாங்கள் எமது முகாமை மூடலாம என நேரடியாக அப்பகுதி வீடுகளுக்குச் சென்று படையினர் வற்புறுத்தி வருவதாகவும், இதனால், அப்பகுதி மக்கள் அச்சமான சூழ்நிலையில் வாழ்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இப்பகுதி மக்கள் தொடர்பாக அண்மையில் அவர்களுடன் சந்தித்து உரையாடிச் சென்றிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் பலர் தடுத்து நிறுத்தப்பட்டபோதிலும் முழுமையான சந்திப்பொன்றுக்காக நாளை வெள்ளிக்கிழமை பல்கலைக் கழக மாணவர்கள் நூறு பேர் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் செல்லவுள்ளதாகவும் அவர்கள் அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக பேச்சுக்களை நடத்தி ஆக்கபூர்வமான உதவித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

## இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

புகையிரத சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்க எடுக்கும் நடவடிக்கைகளைக் கைவிடும்படியும் இது குறித்து அரசு வெளியிட்ட அறிவிப்பை மீளப்பெறவேண்டுமென கோரியும் புகையிரத திணைக்களத்தைச் சேர்ந்த 32 ஊழியர்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

## கடற்புலி...

செய்து கொள்ளப்போவதாக எச்சரித்திருந்தார்.

இச்சம்பவத்தை அறிந்து அப்பகுதிக்குச் சென்ற விடுதலைப்புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரின் கடிதத்தை அடுத்து பொலிசார் அங்கிருந்து வெளியேறினர். (27)

# பகுதிநேர ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்கள்

முல்லைத்தீவு மாவட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம் எதிர்வரும் மூன்றாம் தவணை முதல் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும் மற்றும் அங்கத்தவர் சமர்ப்பித்த விபரம் தொடர்பாகவும் அவசரமான கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப. 2.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

முல்லை. துணுக்காய் வலயங்களைச் சேர்ந்த அனைத்து பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் தற்போது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் குறித்தும் உடனடிக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளதால் கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் எதிர்வரும் 23 சனிக்கிழமை காலை 10.00மணிக்கு கிளி.மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (பா.26)

## கொலைச்...

இச்சம்பவத்தின் பின் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் ரஞ்சித் கொலை வழக்கின் முக்கிய சந்தேகநபர் சுனில் ரத்தினவீர சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆயுததாரிகள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இவ்வாறு கொலை செய்யப்பட்ட சுனில் ரத்தினவீர மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் கொலையுடனும் தொடர்புபட்டிருந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (வே)

## ஆளி..

ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இச்சந்திப்பில் உயர் பாதுகாப்பு வலயம், குடாநாட்டின் விவசாய நடவடிக்கை, தென்மராட்சியில் பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் குடாநாட்டு புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

மேலும் பொது நூலகத்தைச் சென்று பார்வையிட்ட அவர் நேற்று பிற்பகல் கொழும்பு திரும்பியுள்ளார். (27,33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.